# விலைமனுக்கோரல் (IFB)

**கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு**

**இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்**

## கல்பிட்டிய மீன்பிடித் துறைமுகத்தில் தற்போதுள்ள படகுத்துறையின் புனரமைப்பு

**கோப்பு இலக்கம் : CFHC/PD/REJ/KLP/2026-80**

1. மேற்கூறிய வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் **(DPC)** தலைவரினால் கோரப்படுகின்றன. இந்தப் பணிகளில் இடிப்புப் பணிகள், அகற்றும் பணிகள், கொங்கிரீட் பணிகள், தூண்களை செய்யும் பணிகள், நிரப்பும் பணிகள் மேலும் பல பணிகள் போன்றன அடங்கும். எதிர்பாராத செலவுகள் மற்றும் பெறுமதிசேர் வரி (VAT) இல்லாமல், பொறியியலாளர்களின் அண்ணளவான மதிப்பீட்டுச் செலவு 46.9 மில்லியன் ரூபாவாகும்.

2. விலைமனுக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் மேற்கொள்ளப்படும்.

3. விலைமனுதாரர்கள் பின்வரும் தகுதி அளவுகோல்களுக்கு இணங்க வேண்டும்.
   - விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் கட்டிடம் அல்லது பாலம் கட்டுமானத் துறையில் **C6,C5** மற்றும் **C4** தரங்களில் CIDA நிறுவனத்தின் பதிவைப் பெற்றிருக்க வேண்டும்.

4. விலைமனுதாரர்கள் பின்வரும் தகைமை அளவுகோல்களுக்கு இணங்க வேண்டும்.
   - கடந்த ஐந்து (05) வருடங்களில் (2019,2020,2023,2024,2025) மேற்கொள்ளப்பட்ட நிர்மாணப் பணிகளின் புரள்வு குறைந்தபட்சம் 77 மில்லியன் இலங்கை ரூபாவாக இருத்தல் வேண்டும்.
   - கடந்த 5-10 வருடங்களில், குறைந்தபட்சம் 36 மில்லியன் இலங்கை ரூபா திட்ட மதிப்புடன், இதே போன்ற தன்மை மற்றும் சிக்கலான தன்மை கொண்ட குறைந்தபட்சம் ஒரு ஒப்பந்தத்தை (இந்தத் தேவைப்பாட்டிற்கு இணங்குவதற்கு, கூறப்பட்ட பணிகள் 70% நிறைவடைந்திருக்க வேண்டும்). பிரதான ஒப்பந்தக்காரராக நிர்மாணித்த அனுபவம்.
   - திட்ட நிறைவுத் திகதி வரை, ஒப்பந்தத்தின் கீழ் செய்யப்படக்கூடிய எந்தவொரு முற்பணத்தையும் தவிர்த்து, ஏனைய ஒப்பந்தக் கடமைகளை நீக்கிய பின்னர், குறைந்தபட்ச திரவச் சொத்துகள் மற்றும் / அல்லது கடன் வசதிகளின் அளவு 26 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.
   - ரூ.5 மில்லியனுக்கு மேற்பட்ட ஒவ்வொரு விலைமனுவிற்கும், விலைமனுதாரர் 1987 இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் நிறுவன பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் சான்றிதழை பெற்றிருக்க வேண்டும். இது ஒப்பந்தம் கையளிக்கப்படுவதற்கான ஒரு தகைமையாகும்.

5. இந்த விலைமனுக்கோரலுக்கான நிர்மாணக் காலம் 180 நாட்காட்டி நாட்கள் ஆகும். மேலும், இத்திட்டம் அமைவிடம் புத்தளம் மாவட்டத்தில் கல்பிட்டிய மீன்பிடித் துறைமுகத்தில் உள்ளது.

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு 15, இல.15, ரொக்ஹவுஸ் ஒழுங்கை, இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம், சிவில் பொறியியல் பிரிவு, பிரதிப் பொது முகாமையாளர் (பொறியியல்) அவர்களிடமிருந்து 011-2529391 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் கொழும்பு 15, இல.15, ரொக்ஹவுஸ் ஒழுங்கை, இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம், பெறுகைப் பிரிவு அலுவலகத்தில் பெறுகை ஆவணங்களை, (கட்டணமின்றி இலவசமாக) பரீட்சித்துப் பார்க்கலாம்.

7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், 2026.08.11 ஆம் திகதி முதல் 2026.09.02 ஆம் திகதி வரை எந்தவொரு வேலை நாளிலும் மு.ப 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத ரூ.5000.00 கட்டணத்தைச் செலுத்தி கொழும்பு 15, இல.15, ரொக்ஹவுஸ் ஒழுங்கை, இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம், பெறுகை முகாமையாளருக்கு வியாபாரக் கடிதத் தலைப்பில் எழுத்துப்பூர்வமான கோரிக்கை ஒன்றினை சமர்ப்பித்து ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

8. விலைமனுக்கள் 2026.12.03 ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும். (91 நாட்கள்)

9. சகல விலைமனுக்களுடனும் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 119 நாட்கள் வரையில் (2026.12.31) செல்லுபடியாகும் ஆறு இலட்சத்து எழுபத்தி ஐந்து ஆயிரம் (ரூபா. **675,000.00**) ரூபாவிற்கான (வங்கி உத்தரவாதம் அல்லது ரொக்கப் பண வைப்பு) விலைமனுக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருக்க வேண்டும். ரொக்கப் பண வைப்பின் பற்றுச் சீட்டின் பிரதியொன்று விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

10. நகல் பிரதிகளுடனான முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் "தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு, பெறுகைப் பிரிவு, இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம், இல.15, ரொக்ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15 எனும் முகவரிக்கு 2026.09.03 ஆம் திகதி மு.ப.11.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். வருகைத் தந்துள்ள விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும். (விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்).

11. விலைக்கோரல் முந்தையக் கூட்டம் ஒன்று கொழும்பு 15, இல.15, ரொக்ஹவுஸ் ஒழுங்கை, இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் குழும அறையில் 2026.08.21ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இடம்பெறும்.

12. சகல விலைமனுதாரர்களும் 2007 ஜனவரியின் CIDA/ SBD/02 இரண்டாம் பதிப்பை கவனமாக வாசிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். (Succeeding ICTAD/SBD/02)


**தலைவர்,**<br>
**திணைக்கள பெறுகைக் குழு,**<br>
**பெறுகைப் பிரிவு,**<br>
**இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,**<br>
**இல.15, ரொக்ஹவுஸ் ஒழுங்கை,**<br>
**கொழும்பு 15.**